# தாரமங்கலம் நகராட்சி
# நகர்மன்ற சாதாரண கூட்டம்
# நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து வார்டு உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னிலை :– திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,
நகராட்சி மன்ற தலைவர்,
தாரமங்கலம் நகராட்சி.

**பொருள் எண்.424 (1)**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் மார்ச் 2023 ஆம் மாதத்தில் நிகழப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| மார்ச் | 0 | 0 | 0 | 8 | 9 | 17 | 0 | 0 | 0 |

**பொருள் எண் . 425 (2)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியில் தினசரி உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து நகராட்சிக்கு வழங்கிட Out sourcing முறையில் பணியாளர்கள் வைத்து பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து ந.க.எண்.34638/2022/EA2-SWM-14 நாள்.10.01.2023–ன்படி ஒரு டன் குப்பை தரம் பிரிப்பதற்கு ரூ.4154.50 வீதம் வழங்கிட செயல்முறை ஆணை வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.எஸ்.கே டெக் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி 01.05.2023 முதல் தாரமங்கலம் நகராட்சியில் 1 முதல் 27 வார்டுகளிலும் உருவாகும் குப்பைகளை ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து அதற்கான எடையினை அளவீடு செய்து நகராட்சிக்கு வழங்கிட மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.04/2022/அ2)

பொருள் எண் . 426 (3)

15 வது மத்திய நிதிக்குழு (Un Tied Grant) 2022–2023ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டுள்ள 11 சிமெண்ட் சாலைப்பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் கலை கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வகைப்பாடு | எடுக்கப்படவுள்ள பணிகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வ. எண் | Unicode Number | பணியின் விபரம் | நீளம் மீ | தொகை ரூ (இ) |
| 1 | வரையறுக்கப் படாத பணிகள் Un Tied Grant (மொத்த ஒதுக்கீடு ரூ.37.00 இலட்சம்) | 1 | 189005L009 | Vettni Karadu East 4th Street<br>வெட்னிகரடு கிழக்கு 4 வது தெரு | 50 | 2.40 |
| | | 2 | 189005L008 | Vettni Karadu East 3rd Street<br>வெட்னிகரடு கிழக்கு 3 வது தெரு | 81 | 5.65 |
| | | 3 | 189006R035 | Pillaiyar kovil street<br>பிள்ளையார் கோவில் தெரு | 38 | 2.25 |
| | | 4 | 189006S087 | karai kattu vellalar street 3<br>காரைக்காட்டு வெள்ளாளர் தெரு 3 | 51 | 2.00 |
| | | 5 | 189010R049 | Thandu Mariamman Kovil Theru<br>தண்டு மாரியம்மன் கோவில் தெரு | 104 | 3.80 |
| | | 6 | 189012R084 | Arunachalakurukkal street<br>அருணாச்சலகுருக்கள் தெரு | 76 | 3.70 |
| | | 7 | 189012R091 | kailasanadhar kovil street<br>கைலாசநாதர் கோவில் தெரு | 108 | 5.60 |
| | | 8 | 189014R107 | Annai Nagar road street 3<br>அன்னை நகர் தெரு 3 | 105 | 3.95 |
| | | 9 | 189018L026 | Thangasalai 4th cross street<br>தங்கசாலை 4 வது குறுக்கு தெரு | 89 | 3.20 |
| | | 10 | 189018R129 | Muniyappan Kovil 1St Street<br>முனியப்பன் கோவில் 1 வது தெரு | 110 | 5.30 |
| | | 11 | 189007S089 | Agraharam Kovil Street<br>அக்ராஹாரம் கோவில் தெரு | 90 | 3.85 |
| | | | | **Total** | **902** | **41.70** |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.291/2023/அ1)

**பொருள் எண்.427 (4)**

தாரமங்கலம் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 ஆம் ஆண்டிற்கான Tied Grant-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 5 எண்ணிக்கை BOV வாகனங்கள் ரூ.10.00 லட்சத்திற்கும் 5 எண்ணிக்கை LCV வாகனங்கள் ரூ.36.50 லட்சத்திற்கும் கொள்முதல் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 5 BOV வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கு 18.04.2023 ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள வலம்புரி இன்டஸ்ட்ரீஸ் கோயம்புத்தூர், என்ற நிறுவனத்திற்கும், 5 LCV வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கு 18.04.2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள லட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ் மேட்டூர் நிறுவனத்திற்கும் பணி உத்தரவு வழங்கி கொள்முதல் செய்து கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.371/2023/அ1)

**பொருள் எண்.428 (5)**

தாரமங்கலம் நகராட்சியில் ஏற்கனவே உள்ள 1477 எண்ணிக்கை தெரு மின் விளக்குகளை LED தெரு மின் விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.179.00 இலட்சம் நிதியினை மாநில நகர்புற அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியில் கடன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | தெருவிளக்குகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள தெருமின் விளக்குகளை LED மின் விளக்குகளாக மாற்றுதல். | 1477 | 179.00 |

அதன்படி தயார் செய்து ரூ.179.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேற்படி திட்டத்தின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணையை அனுப்பி வைக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் 13.03.2023 ஆம் தேதி நிர்வாக அனுமதியும் நகராட்சி நிர்வாக முதன்மை பொறியாளர் சென்னை அவர்களால் 20.03.2023 ஆம் தேதி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, 10.04.2023 ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள குமரன் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.331 /2023/அ1)

பொருள் எண். 429 (6)

தாரமங்கலம் நகராட்சியில் தற்போது முதலமைச்சர் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தில் அரசு தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கு வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 4 தொடக்கப்பள்ளி மற்றும் 5 நடுநிலைப்பள்ளி என கீழ்க்கண்டுள்ள 9 பள்ளிகளையும் தாரமங்கலம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் மாற்றுவதற்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பள்ளிகள் | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 12வது வார்டு சன்னதி தெரு |
| 2. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 26வதுவார்டு கீழ்சின்னாகவுண்டம்பட்டி |
| 3. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 1வது வார்டு கசுவரெட்டிப்பட்டி |
| 4. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | 19வது வார்டு தெற்கு ரதவீதி |
| 5. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | 3வது வார்டு பாரக்கல்லூர் |
| 6. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | 14வது வார்டு ஜலகண்டாபுரம் மெயின் ரோடு |
| 7. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | 9வது வார்டு அருணாசலம்புதூர் |
| 8. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | 24வது வார்டு எம்.ஜி.ஆர்.காலனி |
| 9. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | 16வது வார்டு மோட்டுப்பட்டி |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.739/2022/அ1)

பொருள் எண். 430 (7)

முதலமைச்சர் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கு மைய சமையற்கூடம் 3வது வார்டு பாரக்கல்லூர் பகுதியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு அருகில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே 3வது வார்டு பாரக்கல்லூர் பகுதி சர்வே எண்.54/4–ல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில், ரூ.20.00/– லட்சம் மதிப்பீட்டில் மைய சமையற்கூடம் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கும் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 06.04.2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.ஆ.சண்முகம் ஒப்பந்ததாரர் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் மற்றும் மேற்கண்ட மதிப்பீட்டு தொகையினை அரசிடம் ஏதேனும் ஒரு திட்டத்தில் கோரி தொகை

விடுவிக்கும் வரை நகராட்சியின் பொதுநிதியில் தொகையினை பயன்படுத்திடவும் பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.739/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.431 (8)

தாரமங்கலம் நகராட்சியில் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022–2023 (NSMT 2022-2023)ன் கீழ் தாரமங்கலம் நகராட்சியில் 1 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் பல்வேறு பகுதிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள தார் சாலைகளை ரூ.59.29 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்தல் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 12.04.2023 ஆம் தேதி அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 27.04.2023 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிடும் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| S. No. | Name of the work | Length Km | Estimate Amount Rs. in Lakhs |
|---|---|---|---|
| 1 | பனங்காடு ரோடு (189003S014), உப்புகிணறு தெரு, (189010R081), காரைக்காட்டு மாரியம்மன் கோவில் தெரு (189014R103),, கோழிக்காட்டானூர் மெயின் ரோடு (189014R061),, கைலாசநாதர் கார்டன்(189016R124), , கிழக்குபாவடி (189020R142), , மாரியம்மன் கோவில் 2வது வார்டு தெரு (189026S183), ஜங்ஷன் ரோடு தெரு 1(189008R040), , ஓமலூர் தெரு – அ(189008R044),, மாட்டுக்காரன் தெரு (189006S081) ஆகிய பகுதிகளில் உள்ள தார்சாலைகளை புனரமைப்பு செய்தல். | 1.65 | 59.29 |
| 1 | Providing improvement works at Panangadu road (189003S014), Uppukinaru theru (189010R081), Karaikattu mariamman kovil street (189014R103), Kolikaatanur main road (189014R061), Kalaisanathar garden(189016R124), Kilakkukpavadi (189020R142), Mariamman kovil 2 nd street(189026S183), Junction road street -1 (189008R040), Omalur street- A (189008R044), Mattukaran street (189006S081) in Tharamangalam municipality | 1.65 | 59.29 |
| | **Total** | **1.65** | **59.29** |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.157/2023/அ1)

பொருள் எண்.432 (9)

தாரமங்கலம் நகராட்சியின் வாரச்சந்தையினை தரம் உயர்த்தும் நோக்கில் தாரமங்கலம் நகராட்சியினால் புதியதாக வாரசந்தையினை உட்கட்டமைப்பு வசதிகளுடன் கடைகளாக 2023–2024 முதல் அரையாண்டிற்குள் கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது வாரச்சந்தையை 2022–2023ஆம் ஆண்டிற்கு ஏலம் எடுத்த ஏலதாரராகிய திரு.எ.பெரியசாமி என்பவர் 2023–2024 ஆண்டிற்கு 5 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட தொகையினை செலுத்தி புதுப்பித்து கொள்ள ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார்.

புதிய வாரசந்தைகள் அமைக்கும் பணி 2023–2024 முதல் அரையாண்டிற்குள் மேற்கொள்ளப்படும்பட்சத்தில்,முதல் அரையாண்டில் பணி ஆரம்பிக்கும் தேதியிலிருந்து 30.09.2023 வரை உள்ள வாராந்திரம் நடைபெறும் வியாழக்கிழமை சந்தையினை அடிப்படையாக கொண்டு தொகையினை கணக்கீட்டு ஏலதாரராகிய திரு.எ.பெரியசாமி என்பவர்க்கு வழங்கவும் அல்லது 2023–24 இரண்டாம் அரையாண்டில் வாரசந்தை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இரண்டாம் அரையாண்டு தொகையினை ஏலதாரராகிய திரு.எ.பெரியசாமி என்பவரிடம் பெற்றுக்கொள்ளவும் ,

மேற்கண்ட காரணங்களினால் ஏலதாரராகிய திரு.எ.பெரியசாமி என்பவர் 2023–2024 ஆண்டிற்கு 5 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட தொகையில், முதல் அரையாண்டு தொகை (01.04.2023 முதல் 30.09.2023 ஆம் வரை) மட்டும் கீழ்காணும் விவரப்படி ஏலதாரரிடம் வசூல் செய்வதற்கும் கால நீட்டிப்பு செய்து புதுப்பித்து காய உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 2022–2023 ஆம் ஆண்டு ஏலத் தொகை | ரூ.1757000/– |
| 2 | 5 சதவீதம் உயர்வு | ரூ.87850/– |
| 3 | 2023–2024 ஆம் ஆண்டுக்கு வாரச்சந்தை கேட்பு தொகை | ரூ.1844850/– |
| 4 | 01.04.2023 முதல் 30.09.2023 ஆம் வரை ஆறு மாத காலத்திற்கு மட்டும் | ரூ.922425/– |
| 5 | GST 18 சதவீதம் | ரூ.166036/– |
| 6 | வருமான வரி 2 சதவீதம் | ரூ.18448/– |
| 7 | வருமான வரிக்கு மேல்வரி 10 சதவீதம் | ரூ.1845/– |
| 8 | கல்வி வரி 4 சதவீதம் | ரூ.74 /– |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.15/2022/அ1)

பொருள் எண்.433 (10)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டு பகுதிகளிலும் 2023– 2024ஆம் ஆண்டிற்கு புல், பூண்டு, முட்புதர்கள் மற்றும் மேடான பகுதிகளை சமன் செய்தல் ஆகிய பணிகள் ஜெ.சி.பி பயன்படுத்தி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.00/– லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியில் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 07/2023/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.434 (11)

சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக ந.க.எண்.1739/2023/அ2 நாள்.23.02.2023ஆம் தேதியின் படி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித்திட்டம் 2022–2023ஆம் ஆண்டு திட்டத்தில் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எ.கே.பி.சின்ராஜ் அவர்களால் சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு கீழ்க்காணும் இரண்டு பணிகள் மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒதுக்கீடு ரூ.லட்சம் | உத்தேச மதிப்பீடு ரூ.லட்சம் | சாத்தியக்கூறு |
|---|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி (பழைய வார்டு எண்.5) வார்டு எண்16 ஆணைக்கவுண்டன்வளவு நாச்சியம்மாள் கோவில் அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல். (9 mtr Latter type 150 watts 6 nos) | 2.36 | 2.55 | பணி செய்ய இடையூறுகள் ஏதுமில்லை சாத்தியக்கூறு உள்ளது. ஆனால் மதிப்பீட்டு தொகை ரூ.2.55லட்சம் தேவைப்படுகிறது. |
| 2. | தாரமங்கலம் நகராட்சி (பழைய வார்டு எண்.4) மேல்சின்னாகவுண்டம்பட்டி சமத்துவபுரம் 25வது வார்டில் உயர்கோபுர மின் விளக்கு அமைத்தல் (9 mtr Latter type 150 watts 6 nos) | 2.36 | 2.55 | பணி செய்ய இடையூறுகள் ஏதுமில்லை சாத்தியக்கூறு உள்ளது. ஆனால் மதிப்பீட்டு தொகை ரூ.2.55 லட்சம் தேவைப்படுகிறது. |

அலுவலக குறிப்பு :

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.267/2023/அ1)

பொருள் எண்.435 (12)

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள 13வது வார்டு நல்லகிணறு பகுதியில் உள்ள பொதுகழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்தியதில் பழைய இரும்பு கம்பி, மரச்சாமான்கள் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு ஏலம் விடப்பட்டதில் ஏலத்தொகை ரூ.2500/—யை திரு.கோபி த/பெ பெரியாகவுண்டர் என்பவரிடம் வசூல் செய்து நகராட்சியின் பொதுநிதியில் வரவாக்கப்பட்டுள்ளது பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.15/2022/அ1)

பொருள் எண். 436 (13)

தாரமங்கலம் நகராட்சி நெடுஞ்சாலைத்துறைக்கு சம்மந்தப்பட்ட சாலையோர பலன் தரும் புளிய மரங்கள் மரமகசூல் மற்றும் தாரமங்கலம் நகராட்சிக்கு சம்மந்தப்பட்ட பனைமரங்களின் மரமகசூல் குத்தகை 01.07.2021 முதல் 30.06.2022 முடிய உள்ள காலத்திற்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு ஏலம் விடப்பட்டதில் திரு.எம்.பழனிசாமி என்பவர் தொகை ரூ.10000/—ற்கு ஏலம் எடுக்கப்பட்டமைக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.777/2022/அ1)

பொருள் எண்.437 (14)

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வண்டிப்பேட்டை சுங்க வசூல் மற்றும் ஆடு அடிக்கும் தொட்டி ஆகியவற்றினை 2022—2023 ஆம் ஆண்டு ஏலம் விடப்பட்டதில் 5 சதவீதம் உயர்வு செய்து 2023—2024ஆம் ஆண்டிற்கு கீழ் காணும் விவரப்படி தொகை வசூல் செய்யப்பட்டு கால நீட்டிப்பு செய்து புதுப்பித்து திரு.எம்.சின்னதம்பி என்ற ஏலதாரருக்கு காய உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வண்டிப்பேட்டை சுங்க வசூல்

| | | |
|---|---|---|
| 1 | 2022—2023 ஆம் ஆண்டு ஏலத் தொகை | ரூ. 558000/— |
| 2 | 5 சதவீதம் உயர்வு | ரூ.27900/— |
| 3 | 2023—2024 ஆம் ஆண்டுக்கு வாரச்சந்தை கேட்பு தொகை | ரூ.585900/— |
| 4 | GST 18 சதவீதம் | ரூ.100602/— |
| 5 | வருமான வரி 2 சதவீதம் | ரூ.11718/— |
| 6 | வருமான வரிக்கு மேல்வரி 10 சதவீதம் | ரூ.1172/— |
| 7 | கல்வி வரி 4 சதவீதம் | ரூ.47 /— |

ஆடு அடிக்கும் தொட்டி

| | | |
|---|---|---|
| 1 | 2022–2023 ஆம் ஆண்டு ஏலத் தொகை | ரூ. 58200/– |
| 2 | 5 சதவீதம் உயர்வு | ரூ.2910/– |
| 3 | 2023–2024 ஆம் ஆண்டுக்கு வாரச்சந்தை கேட்பு தொகை | ரூ.61110/– |
| 4 | GST 18 சதவீதம் | ரூ.11000/– |
| 5 | வருமான வரி 2 சதவீதம் | ரூ.1222/– |
| 6 | வருமான வரிக்கு மேல்வரி 10 சதவீதம் | ரூ.122/– |
| 7 | கல்வி வரி 4 சதவீதம் | ரூ.5 /– |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.15 /2022/அ1)

பொருள் எண்.438 (15)

தாரமங்கலம் நகராட்சியின் தினசரி மார்க்கெட் சுங்கவசூல் 2022–2023ஆம் ஆண்டு ஏலம் எடுத்த திரு.கே.ஆனந்தன் த/பெ.கரியமலைகவுண்டர் என்பவர் அதிகபட்ச ஏலத்தொகையாக ரூ.10470000/– க்கு ஏலம் எடுத்து சுங்க வசூல் செய்து வந்தார். தற்போது அவருக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டதால் 2023–2024ஆம் ஆண்டிற்கு புதுப்பித்துக்கொள்ள இயலாது என்றும் மேலும் தினசரி மார்கெட் சுங்க வசூல் ஏலத்தை தாரமங்கலம் நகராட்சி நடத்திக்கொள்ளுமாறு என வரப்பெற்ற கடிதத்தினை தொடர்ந்து தற்போது 2023–2024 ஆம் ஆண்டிற்கு ஏலம் விடுவதற்கு மூன்று ஏலம் நடைபெற்றதில் டெபாசிட் செலுத்தி விட்டு ஏலதாரர்கள் தொகை அதிகம் உள்ளதால் ஏலம் கோர எவரும் முன்வராத காரணத்தினால் 01.04.2023 ஆம் தேதி முதல் தினசரி மார்க்கெட் வசூல் இந்நகராட்சி மேற்கொண்டு வரப்பட்டது.

கடந்த 23 நாட்களில், நகராட்சி மூலம் 7 பணியாளர்கள் கொண்டு தினசரி மார்க்கெட் சுங்க வசூல் செய்யப்பட்டதில் மிக குறைவாகவே தினசரி மார்க்கெட் சுங்க கட்டணம் வசூலாகியுள்ளது. பொது சுகாதார பணியாளர்களை கொண்டு தினசரி மார்க்கெட் சுங்க வசூல் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அன்றாடம் பொது சுகாதார பணிகளும் பாதிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் விலை விகிதப்படி சுயஉதவிக்குழு பணியாளர்கள் பணியமர்த்தி அவர்கள் மூலம் வசூல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படும். மேலும் நகராட்சி பணியாளர்களையோ அல்லது சுயஉதவிக்குழு பணியாளர்களையோ கொண்டு தொடர்ந்து தினசரி மார்க்கெட் வசூல் செய்யப்படும் பட்சத்தில் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும். எனவே இந்நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டு தினசரி மார்க்கெட் ஏலம் மேற்கொள்ள கடைசி மூன்றாண்டு சராசரி தொகை ரூ.58,86,863/– கணக்கிடப்பட்டு, அத்தொகையினை விட அதிகமாக ஏலம் விட இவ்வலுவக ந.க.எண்.15/2022/அ1 நாள்.30.03.2023 –ன் பொது ஏல அறிவிப்பின் படி 10.04.2023 ஆம் தேதி நடைப்பெற்ற நான்காவது ஏலத்தில் தினசரி மார்கெட் சுங்க வசூல் அதிகபட்ச ஏலத்தொகையாக ரூ.62,40,000/– க்கு திரு.கி.காவேரி

என்பவரால் ஏலம் கோரப்பட்டது. ஏலம் முடிந்த நிலையில் வந்த திரு.பே.தங்கவேல் என்ற ஏலதாரரர் மேற்படி ஏலத்தொகையை விட10 சதவீதம் கூடுதலாக தொகை செலுத்துகிறேன் என்றும் மேலும் மறு ஏலம் நடத்துமாறும் கடிதம் வாயிலாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து 11.04.2023 ஆம் தேதி ஏலத்தொகையினை விட 10 சதவீதம் கூடுதலாக சேர்த்து (வரிகள் உட்பட) ரூ.8252000/–க்கு ஒரே வங்கி வரையோலையாக சமர்ப்பித்துள்ளார். இதன் காரணமாக 21.04.2023 ஆம் தேதி நடைப்பெற்ற ஐந்தாவது பொது ஏலம் நடத்தப்பட்டதில், 23 நபர்கள் கலந்து கொண்டனர். மேற்படி தினசரி மார்கெட் சுங்க வசூல் 2023–2024 ஆம் ஆண்டிற்கு அதிக பட்ச ஏலத்தொகையாக ரூ.8655000/–க்கு திரு.ர.இளஞ்சி த/பெ ராமகவுண்டர் என்ற ஏலதாரரால் ஏலம் கோரப்பட்டது. ஆகையால் கீழ் காணும் விவரப்படி தொகையை வசூல் செய்த பிறகு, 2023–2024 ஆம் ஆண்டிற்கு தினசரி மார்கெட் சுங்க வசூல் செய்ய நகராட்சியால் தெரிவிக்கப்படும் ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு காய உத்தரவு வழங்குவதற்கு (பின்வரும் தொகையினை முழுமையாக செலுத்திய நாளில் இருந்து 31.03.2024 வரை மட்டும், 2024– 2025 மற்றும் 2025–26 ஆகிய ஆண்டுகளுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து தினசரி மார்க்கெட் சுங்க வசூல் மேற்கொள்ள ) மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 2023–2024 ஆம் ஆண்டுக்கு தினசரி மார்கெட் சுங்க வசூல் ஏலத்தொகை | ரூ. 8655000/– |
| 2 | GST 18 சதவீதம் | ரூ. 1557900/– |
| 3 | வருமான வரி 2 சதவீதம் | ரூ. 173100/– |
| 4 | வருமான வரிக்கு மேல்வரி 10 சதவீதம் | ரூ. 17310/– |
| 5 | கல்வி வரி 4 சதவீதம் | ரூ. 692/– |
| | மொத்தம் | ரூ.10404002/– |

**மூன்று ஆண்டு சராசரி விவரம்**

| வ.எண் | வருடம் | தினசரி மார்கெட் தொகை ரூ. | மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | **2020–2021** | 3507604 | |
| 2. | **2021–2022** | 3682984 | |
| 3. | **2022–2023** | 10470000 | 5886863 |
| | மொத்தம் | **17660588/ 3 =** | |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 15/2022/அ1)

**பொருள் எண்.439 (16)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 26வது வார்டு கீழ்சின்னாகவுண்டம்பட்டி பகுதியில் சர்வே எண்.244/3–ல் தற்போது புதிய எரிவாயு தகனமேடை, குப்பைகளை தரம் பிரிக்கும் பணி மற்றும் நுண்ணுயிரி மையம் அமைத்தல் ஆகிய திட்டப்பணிகள் அதிக அளவில் நடைபெற்று வருவதால் அப்பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்திட அவசியம் உள்ளது.

எனவே அப்பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து அதில் மின்மோட்டார் பொருத்துவதற்கு ஏற்படும் செலவினத்தினை நகராட்சியின் பொதுநிதியில் அல்லது 15வது நிதிக்குழு திட்டம் 2022–2023இன் கீழ் இப்பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.86/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் அல்லது 15வது நிதிக்குழு திட்டம் 2022–2023 மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.440 (17)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 19வது வார்டு பகுதியில் சங்ககிரி மெயின் செல்வவிநாயகர் கோவில் பகுதியில் தொகை ரூ.75000/– மதிப்பீட்டில் பொது மக்களின் அவசர தேவையினை கருத்தில் கொண்டு அப்பகுதியில் சிறுபாலம் நகராட்சியின் பொதுநிதியில் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.411 /2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.441 (18)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 8வது வார்டு பகுதியில் ஓமலூர் மெயின் பகுதியில் தொகை ரூ.68000/– மதிப்பீட்டில் பொது மக்களின் அவசர தேவையினை மற்றும் கோவில் குடமுழுக்கு விழா நடைபெற உள்ளதால் பொதுமக்களின் பாதுகாப்பு கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று, அப்பகுதியில் மழைநீர் வடிகால் புனரமைக்கும் பணி மேற்கொண்டமைக்கு நகராட்சியின் பொதுநிதியில் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.411 /2022/அ1)
2. மேற்கண்ட செலவினத்தினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.442(19)**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023ஆம் ஆண்டு தாரமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 17.04.2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 03.05.2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ. | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (இ) |
|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி 17வது வார்டு புதுத்தெரு லைன் எஸ்.பி.கோவிந்தராஜி வீடு முதல் வெங்கடேஷ் வீடு வரை புதிய கான்கீரிட் சாலை அமைத்தல். | 15.00 |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.339 /2023/அ1)

**பொருள் எண்.443 (20)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியில் குடிநீர் இணைப்பு வேண்டி சேலம் மாவட்ட நுகர்வோர் நீதிமன்ற வழக்கு எண்.CC.16/2022–ன் தீர்ப்பானையினை எதிர்த்து தடையாணை வேண்டி சென்னை நுகர்வோர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.634/Consumer–ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி தடையாணை வழக்கினை தொடர சென்னை நுகர்வோர் நீதிமன்றத்தில் திரு.ப.கௌதம் இளநிலை உதவியாளர் என்பவரால் ரூ.28500/– வங்கி வரைவோலை எடுத்து அனுப்பி வைக்கப்பட்டது. எனவே ரூ.28,500/– னை மேற்காண் பணியாளர்க்கு நகராட்சியின் பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.116 /2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.444 (21)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியில் சர்வே எண்.244/3–ல் மொத்தம் விஸ்தீர்ணம் 5.33 ஏக்கர் பரப்பளவுள்ள தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சுமார் 13785 Cu.m அளவு உள்ள தேக்க கழிவுகளை தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் ரூ.96.10 இலட்சம் மதிப்பீட்டில் நுண்ணுயிரி செயலாக்க முறையில் அகற்றும் பணி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை மொத்தம் உள்ள 13785 Cu.m தேக்க கழிவுகளில் 9684 cu.m அகற்றப்பட்டுள்ளது.ஆனால் அண்ணா பல்கலைகழக தற்போதைய அளவீட்டில் ஏற்கனவே உள்ள 13785 Cu.m உடன் கூடுதலாக 9,183 Cu.m உள்ளதாக அளவிடப்பட்டுள்ளது.

கூடுதலாக உள்ள 9,183 Cu.m தேக்க கழிவுகளை அகற்ற ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 553/2022/அ1)

பொருள் எண்.445 (22)

15 வது மாநில நிதிக்குழு 2022–23 TIED திட்டத்தின் கீழ் தாரமங்கலம் நகராட்சிக்கான தொகை ரூ.60.92/–இலட்சத்தில் இருந்து கீழ்கண்டுள்ள செலவினங்களை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | நுண்உரமையத்திற்கான பொது நிதி பங்கீடு | ரூ 11.73 இலட்சம் |
| 2 | BOV/LCV வாகனங்கள் கொள்முதல் செய்திட | ரூ 46.50 இலட்சம் |
| 3 | மீதி தொகை ( மயானத்தின் குடிநீர் தேவைக்காக புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க ) | ரூ 2.69 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.60.92 இலட்சம் |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 553/2022/அ1)

பொருள் எண்.446 (23)

15 வது மாநில நிதிக்குழு 2023–24 TIED திட்டத்தின் கீழ் தாரமங்கலம் நகராட்சிக்கான தொகை ரூ.66.96/–இலட்சத்தில் இருந்து கீழ்கண்டுள்ள செலவினங்களை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | நவீன எரிவாயு தகன மேடை அமைக்க இயந்திரங்களை automation முறையில் அமைக்க | ரூ 47.34 இலட்சம் |
| 2 | நுண்ணுயிரி செயலாக்க முறையில் தேக்க கழிவுகளை அகற்றும் பணிக்கான பொது நிதி பங்கீடு | ரூ 16.34 இலட்சம் |
| 3 | சமுதாய கழிப்பிடத்திற்கான பொது நிதி பங்கீடு | ரூ 3.28 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.66.96 இலட்சம் |

அலுவலக குறிப்பு :

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.371/2023/அ1)

**பொருள் எண்.447 (24)**

2020–2021 ஆம் ஆண்டிற்கான 15வது மத்திய நிதிக்குழு (15CFC) தாரமங்கலம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் பெறப்பட்ட நிதியில் இருந்து இரண்டு நுண்ணுயிர் உரமாக்குதல் மையங்களுக்கு கீழ்கண்ட இயந்திரங்கள் கொள்முதல் செய்ய 10.04.2023 ஆம் தேதி அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது. 26.04.2023 ஒப்பந்தபுள்ளி திறக்கப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கும் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி கீழ்க்கண்ட இயந்திரங்கள் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | எண்ணிக்கை | மொத்த மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 15CFC 2020-21 | Supply and Fixing of Bio Organic Shredder Machine at MCC-1 centre, S.No .244/3, Keel Chinna Goundampatti, Ward.26 (மக்கும் குப்பைக்கான அரவை இயந்திரம் ) | 2 | 2 x 5.10 = 10.20 |
| 2 | 15CFC 2020-21 | Purchase of 6meters Belt conveyor machine (கன்வேயர் பெல்ட்) | 2 | 2 x 4.40 = 8.80 |
| 3 | 15CFC 2020-21 | Purchase of Plastic Automatic Bailing pressmachine (நெகிழிக்கான பெயிலிங் மெசின் ) | 1 | 3.60 |
| 4 | 15CFC 2020-21 | Purchase of Manure Screening Machine(Machanical Siever Shaker) (மென்யுர் ஸ்கீரினிங் மெசின்) | 1 | 2.50 |
| | | **Total** | **6** | **25.10** |

அலுவலக குறிப்பு :

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.371/2023/அ1)

**பொருள் எண்.448 (25)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான 26வது வார்டு கீழ்சின்னாகவுண்டம்பட்டியில் உள்ள மயானத்தினை அந்நியர்கள் வந்து அவ்விடத்தில் மாசுபடுத்துவதாலும், குப்பைகளை எரியூட்டுவதாலும், மயானத்தின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு அப்பகுதியில் ஏற்கனவே கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் போதிய அளவில் கண்காணிப்பு கேமரா இல்லாததாலும், அப்பகுதியில் பல்வேறு திட்டப்பணிகள் , புதிய எரிவாயு தகனமேடை, குப்பைகள் தரம் பிரிக்கும் பணி மற்றும் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் ஆகிய பணிகள் நடைபெற்று வருவதால் அவ்விடத்தினை முழுவதும் கண்காணிக்க இயலாததால் அவ்விடத்தின் பாதுகாப்பு கருதி மேலும் கூடுதலதாக 5 கேமராக்கள் பொருத்தியமைக்கான செலவின தொகை ரூ.56275/– லாஜிக் இன்போ டெக் நிறுவனத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின்

பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 86/2022/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.449 (26)**

தாரமங்கலம் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு திட்டம் 2021–2022–ன் கீழ் வார்டு எண்.7,18,14,15,22,23,24,27 ஆகிய வார்டு பகுதிகளில் பகிர்மானக்குழாய் விஸ்தரிப்பு செய்தல் மற்றும் தண்டு மாரியம்மன் கோவில் தெரு ,பழைய பிள்ளையார் கோவில் தெரு பகுதிகளில் சிறுபாலம் மற்றும் தண்டு மாரியம்மன் கோவில் முதல் 10 தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்தல் ஆகிய பணிகள் குறித்து விளம்பர அறிவிப்பு தினகரன் நாளிதிழில் விளம்பரம் 15.01.2023ஆம் தேதி வெளியிட்டமைக்கு விளம்பரகட்டணத்தொகையாக கல் பப்ளிகேசன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு கேட்பு தொகை ரூ.9955/–யை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.826 /2022/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்

**பொருள் எண்.450 (27)**

தாரமங்கலம் நகராட்சியின் 08.02.2023 முதல் 07.03.2023 வரை கோப்புகள் படிவங்கள் மற்றும் இதர கோப்புகள் ஜெராக்ஸ், அலுவலக கணினி பயன்பாட்டிற்கு தேவையான பேப்பர் மற்றும் பைண்டிங் செலவு ஆகியவைகளுக்கு தொகை ரூ.13210/–யை ராசி பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.07/2023/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்

**பொருள் எண்.451 (28)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட சங்ககிரி ரோடு, ஜலகண்டாபுரம் ரோடு, ஓமலூர் ரோடு, சூரமங்கலம் ரோடு மற்றும் நங்கவள்ளி மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் நகராட்சி எல்லை போர்டுகள் ஸ்டீல் மூலம் அமைத்தமைக்கு ஸ்ரீ ஆறுமுகம் ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் மற்றும் சப்ளையர் தாரமங்கலம் நிறுவனத்திற்கு நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி கோரிய ஸ்ரீ ஆறுமுகம் ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் என்ற நிறுவனத்தின் மூலம் பணி செய்தமைக்கு மேற்காண் நிறுவனத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் தொகை ரூ.135920/– வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.10/2022/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்

**பொருள் எண்.452 (29)**

தாரமங்கலம் நகராட்சியின் அலுவலகம், ட்ராக்டர் மற்றும் பேட்டரி வாகனம் ஆகியவற்றிற்கு ஸ்டிக்கர் ஒட்டியது, அரசு கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு உதவி தொகை ரூ.1000/– வழங்குவது குறித்து பேணர் அச்சடித்தமைக்கு மற்றும் பரிசு பொருட்கள் வாங்கியது , மற்றும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை வீடுகளில் உரக்குழி அமைப்பது தொடர்பாக பேணர் தயாரித்து கொடுத்த தீபம் ஆர்ட்ஸ்க்கு தொகை ரூ.13430/–யை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1055/2021/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்

**பொருள் எண்.453 (30)**

தாரமங்கலம் நகராட்சியில் உள்ள பொது மக்களுக்கு தமிழக அரசின் திட்டங்களை அனைத்து தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பர பேனர் தயார் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்கள் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, தாரமங்கலம் நகராட்சியின் பேருந்து நிலையத்தில் 10 அடி உயரம் மற்றும் 12 அடி அகலம் விளம்பரப்பலகை அமைத்து கொடுத்தமைக்கு அனு இன்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.21589/– நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி

பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 07/2023/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்

**பொருள் எண்.454 (31)**

தாரமங்கலம் நகராட்சியில் உள்ள ஏரி நிரம்பி சாலையில் வெளியேறும் போது புகைப்படம் எடுத்தமைக்கு மற்றும் பேருந்து நிலையத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறையின் வெளியே விளம்பர பலகை செய்யப்பட்டதை புகைப்படம் எடுத்தது , ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் நகராட்சிக்கு சொந்தமான மயானத்தின் வழக்கு தொடர்பாக மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தமைக்கு சன் டிஜிட்டல் ஸ்டுடியோ திரு.பி.செல்வராஜ் என்பவருக்கு தொகை ரூ.25500/—யை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.07/2023/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண் .455 (32)**

தாரமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் கணினி பிரிண்டர் டோனர்கள், 9 எண்ணிக்கை கருப்பு மை பூர்த்தி செய்தது, ஜெராக்ஸ் மெஷின் கருப்பு மை 3 பூர்த்தி செய்து கொடுத்தது, இதர உபகரணங்கள் வாங்கியமைக்கு லாஜிக் இன்போ டெக் நிறுவனத்திற்கு ரூ.18400/—யை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.07 /2023/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.456 (33)**

தாரமங்கலம் நகராட்சியின் அலுவலக தேவைக்கு பயன்படுத்தும் எழுது பொருட்கள், பதிவேடுகள் மற்றும் நோட் வாங்கியமைக்கு ராஜா புக் ஷாப் ஸ்டேஷ்னரிக்கு தொகை ரூ.10428/– நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.07/2023/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்

**பொருள் எண்.457 (34)**

தாரமங்கலம் நகராட்சியின் 08.03.2023 முதல் 07.04.2023 வரை கோப்புகள் படிவங்கள் மற்றும் இதர கோப்புகள் ஜெராக்ஸ், அலுவலக கணினி பயன்பாட்டிற்கு தேவையான பேப்பர் பைண்டிங் செலவு மற்றும் தினசரி மார்க்கெட் ரசீது புத்தகங்கள் ஆகியவைகளுக்கு தொகை ரூ.21729/–யை ராசி பிரிண்டர்ஸ்க்கு நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.15/2022/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.458 (35)**

தாரமங்கலம் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரியும் திரு.பெ.மானுவேல் என்பவருக்கு பதவி உயர்வு வேண்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.No.5667/2023-க்கு தாரமங்கலம் நகராட்சி சார்பாக பதில் அறிக்கை தயார் செய்தமைக்கும் மற்றும் வழக்கு நடத்திக்கொடுத்தமைக்கும் திரு.மௌரியா, வழக்கறிஞர் சென்னை அவர்களுக்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் ரூ.15000/–நகராட்சியின் பொது நிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.304 /2023/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் எண்.459 (36)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பொது மக்களுக்கும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் மழைநீர் சேகரிப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேருந்து நிலையம் மற்றும் வாரச்சந்தை பகுதியில் வெங்கடாஜலபதி நாடக சபாவிற்கு தொகை ரூ.15000/—நகராட்சியின் பொது நிதியில் வழங்க வேண்டியதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 1055/2021/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் எண்.460 (37)

தாரமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள தினசரி சேகரமாகும் குப்பைகளை வார்டு எண்.26 கீழ்சின்னாகவுண்டம்பட்டியில் நுண்ணுயிரி செயலாக்க முறையில் (Bio Mining) குப்பைகள் பிரிக்கப்பட்டு வருவதால் 7வது வார்டு நங்கவள்ளி ரோடு பகுதியில் தற்காலிகமாக சேகரம் செய்து பிரித்து கையாளப்பட்டு வருகிறது. இக்குப்பைகள் பிரித்து கையாளப்படும் இடத்தில் வெளிநபர்களால் அசம்பாவிதம் ஏதும் ஏற்படுத்துவதை கண்காணிப்பு செய்து காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்க 3 சிசிடிவி கேமராக்கள் மேற்படி பகுதியில் பொருத்தும் பணி மேற்கொண்டமைக்கு கூலி தொகை மற்றும் கூடுதல் உபகரணங்கள் வாங்கியமைக்கு செலவினம் தொகை ரூ.14700/—யை லாஜிக் இன்போ டெக் சேலம் நிறுவனத்திற்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 950/2021/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.461 (38)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட **26**வது வார்டு சர்வே எண்.**244/3**–ல் கீழ் சின்னாகவுண்டம்பட்டி பகுதியில் கழிவுநீர் மேலாண்மை திட்டம் மேற்கொண்டு மண் பரிசோதனை பணி மேற்கொள்வதற்கு The Principal Government of Engineering Dharmapuri தொகை ரூ.**21,240/–** நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் பொதுநிதியில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.05/2023/அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண். 424 (1) முதல் 461 (38) வரை, நாள்.28.04.2023.**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**